## தமிழ்நாடு கட்டட மனை விற்பனை

# ஒழுங்குமுறைக் குழுமம் விழிப்புணர்வு நிகழ்ச்சி!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம், தமிழ்நாடு மாநிலத்தில் கட்டட மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம் 2016ஐ நடைமுறைப்படுத்தும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சியை 21.07.2025 அன்று, சென்னை, ரேடிசான் ப்ளூ ஹோட்டலில் நடத்தியது. அதன் முதற்கட்டமாக, விழிப்புணர்வு நிகழ்ச்சி கட்டட மேம்பாட்டாளர்களுக்கு நடத்தப்பட்டது.

ரியல் எஸ்டேட் டெவலப்பர் சங்கங்களின் கூட்டமைப்பு (CREDAI), பில்டர்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (BAI), இந்திய தொழில்துறை கூட்டமைப்பு, தெற்கு பிராந்தியத்தின் உறுப்பினர்கள் (CII), இந்துஸ்தான் வணிக வர்த்தக சபை (HCC), இந்திய வர்த்தக மற்றும் தொழில்முறை சபைகளின் கூட்டமைப்பு (FICCI) மற்றும் இதர மேம்பாட்டாளர்கள் பெரும்பான்மையானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி காக்கர்லா உஷா, இ.ஆ.ப. அவர்கள் தனது தொடக்க உரையில் கட்டட மனை விற்பனை சட்ட விதிகளை செயல்படுத்த, தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான நடவடிக்கைகளை பற்றியும் மேலும் நமது மாநிலத்தில் கட்டட மனை விற்பனை துறையில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஏற்படும் வகையில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்.

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் தலைவர் திரு. ஷிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப (ஓய்வு) அவர்கள், கட்டடமனை விற்பனை திட்டங்களை பதிவு செய்வதில் இக்குழுமத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு சீர்திருத்தங்கள் குறித்து விளக்கினார்.

உதாரணமாக, திட்டப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை விரைவில் பரிசீலித்து முடிக்கும் பொருட்டு, ஒவ்வொரு வாரமும் குழுமக்கூட்டம் நடத்தப்படுகிறது. கூடுதலாக, கட்டட மேம்பாட்டாளர்கள் பயன்பெறும் வகையில், திட்ட பதிவு விண்ணப்பங்களுக்கான நிலையான இயக்க நடைமுறை (Standard Operating Procedure) இக்குழுமத்தின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வீடு வாங்குவோர், கட்டட மேம்பாட்டாளர்கள் மற்றும் உரிமையாளர்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு திங்கட்கிழமையும், குறை தீர்க்கும் கூட்டம் இக்குழுமத்தின் தலைவரால் நடத்தப்படுகிறது.

இக்குழுமத்தின் உறுப்பினர்களான முனைவர் எல். சுப்பிரமணியண், இ.ஆ.ப. (ஓய்வு) மற்றும் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திட்டப் பதிவு விண்ணப்பங்களை கால நிர்ணயத்திற்குள் முடிக்கும் பொருட்டு இக்குழுமத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து கூறினார்கள்.

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தால் திட்டப் பதிவு விண்ணப்பங்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து, இக்குழுமத்தின் அலுவலர்களால் பவர் பாயின்ட் விளக்கக்காட்சி (Power Point Presentation) மூலம் விளக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேம்பாட்டாளர்கள் திட்டப் பதிவு குறித்தும், பல குறைகள் மற்றும் அதனை நிவர்த்தி செய்வது பற்றியும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

இம்மாதிரியான விழிப்புணர்வு நிகழ்ச்சி, வீட்டு மனை விற்பனையாளர்களுக்கும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சியை வரும் நாட்களில் தமிழ்நாடு மாநிலத்தின் பெரிய நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



துணை மேயர் மு.மகேஷ்குமார், அடையாறு மண்டலம், வார்டு–169, சைதாப்பேட்டை, எல்.டி.ஜி.சாலையில் உள்ள சமூக நலக் கூடத்தில் நேற்று (22.07.2025) நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு, பொதுமக்கள் வழங்கிய கோரிக்கைகளுக்கான தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மண்டல அலுவலர் ஹார்டின் ரோஸாரியோ, எஸ்.குணசேகரன், என்.ஆரோக்கியராஜ், சைதை வரதன், மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அரசியல் அழுத்தம் காரணமாகவே

# குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் பதவி விலகல்!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 23-

குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் திடீரென தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது பல்வேறு சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பியுள்ளது. அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஜெகதீப் தன்கரின் திடீர் ராஜினாமா புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார். நேற்று மாலை சுமார் 5 மணி வரை தன்கருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அமர்ந்திருந்தோம் என்றும், இரவு 7:30 மணிக்கு தொலைபேசியில் அவருடன் பேசினேன் என்றும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார். நேற்று மதியம் ஒருமணியளவில் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, கிரண் ரிஜிஜு ஆகியோர் பங்கேற்ற நிலையில், மாலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கவில்லை. இந்த இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன என்று ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

**மிகப்பெரிய அரசியல் சதி!**

அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியுள்ளார் என்று மக்களவை திமுக குழு தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்துள்ளார்.

ஜெகதீப் தன்கர் பதவி விலகலில், திரைக்குப் பின், மிகப்பெரிய அரசியல் சதி நடந்து கொண்டிருக்கிறது ; அது விரைவில் வெளிப்படும் என்று உத்தவ் சிவசேனா கட்சியின் சஞ்சய் ராவத் கூறியுள்ளார்.

உடல்நிலை காரணமாக குடியரசு துணைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்திருப்பதாக ஜெகதீப் தன்கர் கூறுவதை நம்பத் தயாராக இல்லை என்று உத்தவ் சிவசேனா கட்சியின் சஞ்சய் ராவத் தெரிவித்துள்ளார். ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கான உண்மையான காரணத்தை ஒன்றிய அரசு கூற வேண்டும் என்று உத்தவ் சிவசேனா எம்.பி. பிரியங்கா சதுர்வேதி வலியுறுத்தியுள்ளார்.

உடல்நிலையை கருத்தில் கொண்டு ஜெகதீப் தன்கர் பதவி விலகவில்லை தன்கர் விவகாரத்தில் நேற்றிரவு என்ன நடந்தது என்பது பா.ஜ.க.வுக்கு மட்டுமே தெரியும் என்று இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி. சந்தோஷ் குமார் கூறியுள்ளார்.

ஏதோ ஒரு அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் திடீரென தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார் என்று ராஷ்டிரிய ஜனதா தளம் நிர்வாகி மிர்துயின்ஜே திவாரி (Mrityunjay Tiwari) கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின் பேரில் திருநிலை ஊராட்சி பாகம் எண் 312ல் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரன் கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று மக்களுடன் உரையாடி உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் ஒன்றியம் கீழநல்லாத்தூர் ஊராட்சியில் மற்றும் திருவள்ளூர் நகரம் காமராஜர் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்புத் திட்டம் முகாம் நடைபெற்றது. இதில் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு விண்ணப்பித்த பொது மக்களுக்கு உடனடியாக சான்றிதழ் வழங்கினார்கள். உடன் திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர்கள் கா. அரிகிருஷ்ணன், எஸ். மகாலிங்கம், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், அதிகாரிகள் ஆணையர் தாமோதரன், ரவிச்சந்திரன், உதயகுமார், கழக நிர்வாகிகள் வி.எஸ். நேதாஜி, தா. மோதிலால், டி.கே. பாபு, குப்பன், டி.எம். ரவி, மோகனசுந்தரம், வளர்மதி பன்னீர்செல்வம், நந்தகோபால், வாசு, மற்றும் பலர் உள்ளனர்.





